# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**ஆணை நாள் 13.05.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 1370/விசாரணை/E/2024**

| | | |
|---|---|---|
| திரு கா.பக்ருதீன் அலி அகமத் | .. | மேல்முறையீட்டாளர் |

*/எதிர்/*

| | | |
|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர்/<br>வட்ட துணை ஆய்வாளர்,<br>மேலூர் வட்டம், மதுரை மாவட்டம் | .. | பொது அதிகார அமைப்பு |

******

**ஆணை**

1) இவ்வாணையத்தின் 10.02.2026 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து, மேலூர் வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு க.ஜெயகாந்தன் 13.05.2026 அன்று ஆணையத்தில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுபடி குறித்துரைத்த காலத்திற்குள் மனுதாரருக்கு தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் யார் என்பது குறித்து மேலூர் வட்டாட்சியர் நடத்திய விசாரணை அறிக்கையை சமர்ப்பித்தார்.

2) மேற்படி அறிக்கையில், மனுதாரர் தனது 6(1) மனுவை அனுப்பியபோது பொறுப்பில் இருந்த பொதுத் தகவல் அலுவலர் / வட்டத் துணை ஆய்வாளர் திரு மு.கலையரசன் உடல்நலக் குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த நிலையில், மரணமடைந்து விட்டார் என்றும், அதன் பின்னர் பொறுப்பேற்ற திருமதி க.முத்துச்செல்வி மனுதாரர் கோரிய தகவல்களை வழங்க உரிய நடவடிக்கை எடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், காலதாமதமாக பதில் வழங்கிய பொதுத் தகவல் அலுவலர் காலமாகிவிட்டதால் சம்மந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மீது நடவடிக்கை மேற்கொள்ள வழிவகையில்லை என ஆணையம் பதிவு செய்கிறது.. எனினும், காலதாமதமாக பதில் வழங்கி மனுதாரருக்கு மனஉளைச்சல் ஏற்படுத்தியதற்காக, மனுதாரருக்கு, தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(8)(b)-ன் கீழ் ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) இழப்பீடாக பொது அதிகார அமைப்பு வழங்கி மனுதாரர் அதை ஏற்பளிப்பு செய்த விவரத்தினை 19.06.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென சம்மந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் SA 1370/விசாரணை/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
வட்ட துணை ஆய்வாளர்,
மேலூர் வட்டம்,
மதுரை மாவட்டம்

வட்டாட்சியர், மேலூர் வட்டம்,
மதுரை மாவட்டம்

திரு பக்ருதீன் அலி அகமது,
காட்டுவா இல்லம்
எண்.10/248, பேட்டை கருங்காலக்கடி,
மேலூர் - 625 101
மதுரை வடடம்

Copy to File
CR/PA